செ.வெ.எண் .1009 நாள் 16.11.2010

## <u>செய்தி வெளியீடு</u>

**<u>வீடுகளில் குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்தினாலும் கடும் நடவடிக்கை - 4 ½ ஆண்டுகளில் 1023 வழக்குகளில் ரூ.75 லட்சம் அபராதம் - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா. மோ. அன்பரசன் தகவல்</u>**

--------------------

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா. மோ. அன்பரசன் அவர்கள் இன்று (16.11.2010) சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்களை வெளியிட்டு குழந்தைத் தொழிலாளர் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார். வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு மா. சுப்பிரமணியன் அவர்கள், தேசிய குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளி குழந்தைகளுக்கான, போட்டிகளில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் விழாப் பேருரையாற்றும் போது குறிப்பிட்டதாவது:-

தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் 407 பள்ளிகள் இயங்குவதாகவும், 15 ஆயிரம் குழந்தைகள் இதில் படித்து வருவதாகவும் இவர்களுக்கு இலவசமாக சீருடை, பேருந்து சலுகை, முட்டையுடன் கூடிய இலவச உணவு, விடுதி வசதி உட்பட பல்வேறு வசதிகளை தமிழ்நாடு அரசு செய்து தருவதாக தெரிவித்தார். இப்பள்ளிகளில் 10-ஆம் வகுப்பு முடித்து மேல் வகுப்புகளில் சிறப்பாக படித்து அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 50 மாணவ மாணவிகளுக்கு மாதம் தலா ரூ.250/- ஊக்கத்தொகை வழங்கி அவர்களை உற்சாகபடுத்திவருவதாகவும் தெரிவித்தார். தொழிற்சாலைகள், கடைகள் மட்டுமல்லாமல் வீடுகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தினாலும் சட்டப்படி குற்றமாகும் என்றும், குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவோருக்கு ரூ.20 ஆயிரம் அபராதம் விதிப்பதோடு பல்வேறு சட்ட நடவடிக்கைளுக்கும் உட்படுத்தப்படுவர் என்றும் தெரிவித்தார்.

கடந்த 4 ½ ஆண்டுகளில் 1646 வழக்குகள் தொடரப்பட்டு, 1023 வழக்குகளில் மொத்தம் ரூ.74 இலட்சத்து 6 ஆயிரத்து 975 அபராத தொகையாக பெறப்பட்டுள்ளதோடு, குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தியவர்களுக்கு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. 855 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, இதர 1060 குழந்தைத் தொழிலாளர்கள் அவர்களது பெற்றோர்களிடம் உரிய அறிவுரைகளுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குழந்தைகள் தினவிழாவில் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டிலிருந்து யூனிசெப் நிதியுதவியுடன் பருத்தி மற்றும் பருத்தி விதைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் ஒருங்கிணைப்புத் திட்டம் சேலம், தர்மபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், வரும் டிசம்பர் மாதத்தில் சென்னை மாநகராட்சி உட்பட அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி மாணவ மாணவியரின் ஒத்துழைப்போடு, அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த போஸ்டர் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டும் பணி நடைபெற உள்ளதாக குறிப்பிட்டார்.

விழாவில் சென்னை மாநகர மேயர் திரு மா. சுப்பிரமணியன் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்களில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில், யூனிசெப் நிறுவனத்தின் குழந்தைகள் பாதுகாப்பு நிபுணர் திரு வித்யாசாகர், தென்னிந்திய வேலையளிப்போர் சம்மேளன செயலர் திரு. ஜவஹர்லால் மற்றும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் திரு கே. அய்யனு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள், சென்னை மாநகராட்சி பள்ளிக் குழந்தைகள், தொண்டு நிறுவனம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் விழாவில் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசு முதன்மைச் செயலர் டாக்டர் டி. பிரபாகர ராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றினார். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் முதன்மைச் செயலர் மற்றும் தொழிலாளர் ஆணையர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு ப. கருப்பசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

விழாவின் நிறைவாக விருதுநகர், தர்மபுரி மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்த தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், மற்றும் நாகர்கோவில் ''களரி'' கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

*******



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9